ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1885/31 - 2014 ඔක්තෝබර් මස 22 වැනි බදාදා - 2014.10.22

*1885/31 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### இலங்கை அதிபர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1999.07.02 ஆம் திகதிய 1086/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அவற்றுக்கு காலத்துக்குக் காலம் கொண்டுவரப்பட்ட திருத்தங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட அல்லது அதன் கீழ் மேற்கொண்டதாகக் கருதப்படுகின்ற எந்தவொரு செயற்பாட்டிற்கும் பாதிப்பு ஏற்படாதவாறு பின்வரும் இலங்கை அதிபர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் படி,

ரீ.எம்.எல்.சீ. சேனாரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

2014, ஒற்றோபர் 21.

**01. நடைமுறைக்கு வரும் திகதி**

இச்சேவைப் பிரமாணக் குறிப்பு 2008.07.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**02. நியமன அதிகாரி**

2.1 தேசிய பாடசாலைகள் அல்லது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் அதிபர் சேவையின் வகுப்பு 1 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய பாடசாலைகளுக்கான அதிபர்களின் நியமன அதிகாரி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவாகும்.

2.2 மேலே 2.1 இல் சேராத அதிபர் வகுப்புக்கள் 1, 2 மற்றும் 3 என்பவற்றின் நியமன அதிகாரி கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நேர்வரிசை அமைச்சின் செயலாளர் ஆவார்.



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**03. சேவை வகை / சேவை வகைகள்**

3.1 சேவை வகை : இலங்கை அதிபர்கள் சேவை

3.2 வகுப்பு – வகுப்பு 3
வகுப்பு 2
வகுப்பு 1

**04. பொறுப்புக்கள்**

தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்றவாறு நோ்வரிசை மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்களின் அதிகாரத்திற்கு உட்பட்ட அரசாங்க பாடசாலைகளின் கல்வியுடன் தொடர்புடைய தேசிய மட்டத்திலான மற்றும் ஏனைய பரீட்சைகள் நடாத்துவதுடன் தொடர்புடையதாக ஒப்படைக்கப்படுகின்ற பணிகள், பாடசாலைகளின் விளையாட்டுக்கள் மற்றும் ஏனைய விடயங்களுடன் தொடர்புடைய பணிகளும் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளை பலப்படுத்துவதற்காக பங்களிப்புச் செய்தல், பாடசாலைகள் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டுமென அரசாங்கத்தினால் தீா்மானிக்கப்படுகின்ற கல்வி சாா்ந்த விடயங்கள் என்பன அடங்கலாக பாடசாலை நிா்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்புடைய நிறைவேற்ற வேண்டிய அனைத்துப் பணிகளையும் அதிபா் சேவை உத்தியோகத்தா்களினால் நிறைவேற்றுதல் வேண்டும்.

**05. சம்பளம்**

5.1 சம்பளக் குறியீட்டு இலக்கம் - ஜீ.ஈ–4 – 2006

5.2 சம்பள அளவுத் திட்டம்
ரூ. 17060 – 7 X 330 – 6 X 400 – 11 X 645 – 14 X 790 -39,925

5.3 உரிய வகுப்பு முறை மற்றும் ஒவ்வொரு வகுப்புக்குரிய ஆரம்ப சம்பளப் படிமுறை:-

| *வகுப்பு* | *ஆரம்ப சம்பளப் படிமுறை* | *ஆரம்ப சம்பளம்* |
|---|---|---|
| 3 | படிமுறை 1 | ரூ. 17,060 |
| 2 | படிமுறை 8 | ரூ. 19,370 |
| 1 | படிமுறை 15 | ரூ. 22,415 |

**06. சேவைக்குரிய பதவிகள்**

6.1 சேவைக்குரிய பதவிகள்

| *அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *பதவிகள் அனுமதிக்கப்பட்ட தரம்* | *அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை* | *பணிகள்* |
|---|---|---|---|
| உதவி அதிபா் | தரம் II<br>தரம் III | 901<br>510 | (i) அதிபரின் நிா்வாகம் மற்றும் கண்காணிப்பின் கீழ் பாடசாலை நிா்வாகத்திற்கு ஒத்துழைத்தல்.<br>(ii) பாடசாலை மட்டத்தில் நடாத்துகின்ற பரீட்சைகளை நடாத்துவதுடன் தொடர்புடைய பணிகளை நிறைவேற்றுதல்.<br>(iii) கற்றல், கற்பித்தல் பணிகளுக்கு பங்களிப்புச் செலுத்துதல்.<br>(iv) பாடசாலைகளில் பாடத்திட்டத்துடன் தொடர்புடைய பணிகளை நிறைவேற்றுதல்.<br>(v) அதிபரினால் ஒப்படைக்கப்படுகின்ற ஏனைய பணிகள்.<br>(vi) அரசாங்கத்தினால் பாடசாலை மட்டத்தில் செயற்படுத்த வேண்டுமெனத் தீா்மானிக்கின்ற பணிகளை நிறைவேற்றுதல். |
| பிரதி அதிபா் | தரம் I<br>தரம் II<br>தரம் III | 1327<br>2495<br>1467 | |

| அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர் | பதவிகள் அனுமதிக்கப்பட்ட தரம் | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|---|
| அதிபர் | தரம் I<br>தரம் II<br>தரம் III | 2205<br>2716<br>4891 | (i) தேசிய கல்விக் கொள்கையுடன் தொடர்புடைய ரீதியில் பாடசாலை நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றினை உரியவாறு வழிநடாத்தி கல்வி அதிகாரிகளினால் ஒப்படைக்கின்ற பணிகளை நிறைவேற்றுதல்.<br>(ii) பாடசாலை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள், பாட மதிப்பீட்டுப் பணிகள் மற்றும் பாடசாலை பௌதீக வளங்கள் என்பவற்றினை சிறந்த முறையில் பேணி வருதலும் கண்காணித்தலும். |
| | | | |

6.2 இணைந்த பதவிகளின் எண்ணிக்கை:

| தரம் | தொகை |
|---|---|
| தரம் I<br>தரம் II<br>தரம் III | 3532<br>6112<br>6868 |

இணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை: 16512

பதவி உயர்வு வழங்கும் போது III , II மற்றும் I ஆகிய தரங்கள் அனைத்தும் இணைந்த பதவியணியாகக் கருதப்படும்.

**குறிப்பு :** i. பதவியணியின் எண்ணிக்கையினை கல்வி முறைமையின் தேவைக்கேற்ப முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின் கீழ் காலத்திற்குக் காலம் மாற்றியமைக்கலாம்.

ii. அனுமதிக்கப்பட்ட பதவியணியினுள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் போது சிங்களம் மற்றும் தமிழ் என்ற மொழி ரீதியில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தனித்தனியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

6.3 **பதவியின் தன்மை:**

நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

**07. ஆட்சேர்ப்பு செய்யும் முறை**

7.1 ஆட்சேர்ப்பு செய்யும் வீதம்

| வகை | வீதம் |
|---|---|
| திறந்த | ஏற்புடையதன்று |
| மட்டுப்படுத்திய | 100% |

7.2 மட்டுப்படுத்திய ஆட்சேர்ப்பு

7.2.1 ஆட்சேர்ப்பு செய்யும் வகுப்பு : இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 3

7.2.2 தகைமைகள்:-

பின்வரும் தகைமையுள்ள பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரியர்கள், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுகின்றனர்.

7.2.2.1 கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்:

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது தேசியக் கல்வி நிறுவகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கல்விமாணிப் பட்டம்

*அல்லது*

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனுமொரு துறையில் பெற்றுக்கொண்ட பட்டமொன்றுடன்

பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா

அல்லது

ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்

அல்லது

(iii) தேசிய கற்பித்தல் டிப்ளோமாவை/ஆசிரியர் பயிற்சி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

7.2.2.2. **அனுபவம்:**

மேற்படி 7.2.2.1 இன் (i) அல்லது (ii) தகைமை பெற்ற இலங்கை ஆசிரியர் சேவையில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலமொன்று அல்லது 7.2.2.1 இன் (iii) தகைமை பெற்ற இலங்கை ஆசிரியர் சேவையில் ஆறு (06) வருட திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் மற்றும் அக்காலப் பகுதியினுள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்திருத்தல்.

7.2.2.3. **உடல் மற்றும் உளசார் தகைமை:**

அனைத்து அபேட்சகர்களும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளசார் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7.2.2.4. ஏனையவை

(i) அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்கு மூன்று (03) முறைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு அபேட்சகருக்கும் அனுமதி இல்லை.

(ii) அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற தினத்தன்று அந்தத் தகைமைகளை அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iii) இலங்கை ஆசிரியர் சேவையில் நிரந்தரமாக்கி இருத்தல் வேண்டும்.

7.2.3. வயது : உச்ச வயதெல்லை 50 வருடங்களாக இருத்தல் வேண்டும்.

7.2.4. ஆட்சேர்ப்பு முறை :

7.2.4.1 எழுத்து மூலப் பரீட்சை :

மூன்று (03) வினாத்தாள்களைக் கொண்ட எழுத்து மூலப் பரீட்சையொன்று நடைபெறும். எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத் திட்டம் பின்னிணைப்பு "அ" வில் உள்ளது.

| ***பாடங்கள்*** | ***உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை*** | ***சித்தியடைவதற்கான புள்ளிகள் (ஆகக் குறைந்தது)*** |
|---|---|---|
| கிரகித்தல் | 100 | 40% |
| பாடசாலை நிர்வாகம் பற்றிய நிகழ்வுகளின் ஆய்வு | 100 | 40% |
| உளச்சார்பு மற்றும் பொது அறிவு | 100 | 40% |

நடாத்தும் அதிகாரம் பெற்றவர் - கல்விச் செயலாளரின் சார்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

7.2.4.2 தொழில்சார் பரீட்சை – சம்பந்தப்படாது.

7.2.4.3 சாதாரண மற்றும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை

7.2.4.3.1 சாதாரண நேர்முகப் பரீட்சை

- எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஒழுங்கு முறைக்கேற்ப வெற்றிடங்களைப் போன்று இரு மடங்கு சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அதில் தகைமை பெறுவோர் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

- நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் : மேற்படி 7.2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வெளியிடப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா எனப் பரீட்சித்தல் மற்றும் உரிய திறமைகளை நிர்ணயித்தல்.

7.2.4.3.2 கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை

- அதிபரின் பொறுப்புக்களுடன் தொடர்புடைய தலைப்பின் கீழ் முன்வைத்தல் ஒன்றினை வழங்குதல் வேண்டும். அதற்காக 25 புள்ளிகள் வழங்கப்படும்.

  (இந்த கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது புள்ளி வழங்கும் முறை பற்றி பின்னிணைப்பு "அ" வின் 4.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

7.2.4.4 நேர்முகப் பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரம் பெற்றவர்-

கல்வி விடயத்துக்குப் பொறுப்பான நேர்வரிசை அமைச்சின் செயலாளர்

7.2.4.5 நேர்முகப் பரீட்சைச் சபை

இலங்கை நிர்வாகச் சேவையின் வகுப்பு 1 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தலைவராகவும் மற்றும் இலங்கை கல்வி நிர்வாகச் சேவை உத்தியோகத்தர் ஒருவர், தமிழ் மொழிமூல உத்தியோகத்தர் ஒருவர், கல்வி அமைச்சுக்கு வெளியிலுள்ள நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களில் ஒருவர் ஆகியோரில் இருந்து இருவர் என்ற அடிப்படையில் மூவர் அடங்கிய நேர்முகப் பரீட்சைச் சபையொன்றாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு : மேற்படி எழுத்துமூல மற்றும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்குப் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கேற்ப உச்ச புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட ஒழுங்கு முறைப்படி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

7.2.5.பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்களைச் சமா்ப்பிக்க வேண்டிய முறை மற்றும் தேவையான கட்டணம் என்பன இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வா்த்தமானி அறிவித்தலில் அல்லது பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

**08. வினைத்திறன்காண் தடைப் பரீட்சை**

8.1

| *வினைத்திறன்காண் தடை* | *வினைத்திறன்காண் தடையில் சித்தியடைய வேண்டிய காலம்* | *வினைத்திறன்காண் தடையின் தன்மை எழுத்துமூல/தொழில்சார்/ சான்றிதழ் பாடநெறி/பிற* |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை | இலங்கை அதிபா் சேவையின் வகுப்பு 3 இற்கு ஆட்சோ்ப்புச் செய்து மூன்று (03) வருடங்களுக்குள் | எழுத்துமூலப் பரீட்சை (பின்னிணைப்பு"ஆ" வைப் பார்க்க) |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடை | இலங்கை அதிபா் சேவையின் வகுப்பு 2 இற்கு பதவி உயா்வு பெற்று மூன்று (03) வருடங்களுக்குள் | எழுத்துமூலப் பரீட்சை(பின்னிணைப்பு "இ" யைப் பார்க்க) |

8.2 பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை நடாத்தப்படும் - வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது ஒரு வருடத்திற்கு இரு முறை நடாத்தப்படும்.

8.3. பரீட்சை நடாத்தும் அதிகாரம் பெற்றவா் - பரீட்சைகள் ஆணையாளா் நாயகம்

**09. மொழித் தோ்ச்சி**

9.1

| **மொழி** | **பெற்றுக்கொள்ள வேண்டிய தோ்ச்சி** |
|---|---|
| மற்றைய அரசகரும மொழி | பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 இன் பிரகாரம் |
| இணைப்பு மொழி | அனைத்து உத்தியோகத்தா்களும் ஆட்சோ்ப்பு தினத்தில் இருந்து மூன்று (03) வருடங்களுக்குள் இணைப்பு மொழியான ஆங்கில மொழித் தோ்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். உத்தியோகத்தா் ஒருவா் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு ஆகக் குறைந்தது திறமைச் சித்தி ஒன்றினை அல்லது அதை விடவும் கூடிய சித்தி ஒன்றினைப் பெற்றிருப்பின் ஆங்கில மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய தேவையில் இருந்து விடுவிக்கப்படுவாா். ஏனைய உத்தியோகத்தா்கள் இங்கு பின்னிணைப்பு "இ" யில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். |

9.2 பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை நடாத்தப்படும்?
வருடத்திற்கு ஒரு முறையாவது நடாத்தப்படும்.

9.3 பரீட்சை நடாத்தும் அதிகாரம் பெற்றவா் - பரீட்சைகள் ஆணையாளா் நாயகம்

## 10. தரம் ரீதியான பதவி உயர்வு

10.1 சேவையின் தரம் III இல் இருந்து தரம் II இற்கு பதவி உயர்த்துதல்

10.1.1. பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள் -

(i) சேவையில் நிரந்தரமாக்கி இருத்தல்
(ii) பதவி உயர்த்துவதற்கான தகைமை பெறுகின்ற தினத்தன்று சேவையின் வகுப்பு 3 இல் ஆகக் குறைந்தது ஆறுவருட (06) தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினை பூர்த்தி செய்தும் ஆறு (06) சம்பள ஏற்றங்களை உழைத்தும் இருத்தல் வேண்டும்.
(iii) உரிய தினத்தன்று 1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
(iv) மற்றைய அரசகரும மொழியில் சித்தியடைந்து அல்லது அதிலிருந்து விடுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
(v) இணைப்பு மொழியில் சித்தியடைந்து அல்லது அதிலிருந்து விடுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
(vi) அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கேற்ப பதவி உயர்வு தினத்திற்கு முந்திய ஆறு (06) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதிலும் கூடிய செயலாற்றுகை ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(vii) பதவி உயர்விற்கான தகைமை பெறுவதற்கு முந்திய ஐந்து (05) வருடங்களுக்குள் முழுமையாக திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(viii) இயலளவு அபிவிருத்தி பயிற்சிப் பாடநெறி 1 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

10.1.2 **பதவி உயர்வு முறை**

தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்களினால் நியமன அதிகாரிக்கு உரிய படிவங்களின் ஊடாக விண்ணப்பிக்கும் போது தகைமைகளைப் பரீட்சித்ததன் பின்னர் தகைமை பெறுகின்ற தினத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வகுப்பு 2 இற்கு நியமன அதிகாரியினால் பதவி உயர்வு வழங்கப்படும். விண்ணப்பிக்க வேண்டிய படிவம் பின்னிணைப்பு "உ" வில் உள்ளது.

10.2 சேவையின் வகுப்பு II இலிருந்து வகுப்பு I இற்கு பதவி உயர்த்துதல்.

10.2.1. பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள்:

(i) பதவி உயர்த்துவதற்காக தகைமை பெறுகின்ற தினத்தன்று சேவையின் வகுப்பு 2 இல் ஆகக் குறைந்தது ஆறு (06) வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஆறு (06) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல் வேண்டும்.
(ii) உரிய தினத்தன்று 2 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
(iii) பதவி உயர்விற்கான தகைமை பெறுவதற்கு முந்திய ஐந்து (05) வருடங்களுக்குள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
(iv) அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கேற்ப பதவி உயர்வு தினத்திற்கு முந்திய ஆறு (06) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதிலும் கூடிய செயலாற்றுகை ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(v) பதவி உயர்விற்கான தகைமை பெறுகின்ற தினத்தன்று பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஒன்றினை அல்லது கல்விமாணிப் பட்டம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
(vi) பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமாவை (DSM) அல்லது பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமாவைப் (PGDEM ) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
(vii) இயலளவு அபிவிருத்தி பயிற்சிப் பாடநெறி 2 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

10.2.2. **பதவி உயர்வு முறை**

தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்களினால் நியமன அதிகாரிக்கு உரிய படிவங்களின் ஊடாக விண்ணப்பிக்கும் போது தகைமைகளைப் பரீட்சித்ததன் பின்னர் தகைமை பெறுகின்ற தினத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வகுப்பு 1 இற்கு நியமன அதிகாரியினால் பதவி உயர்வு வழங்கப்படும். விண்ணப்பிக்க வேண்டிய படிவம் பின்னிணைப்பு "ஊ" வில் உள்ளது.

**11. பதவிகளுக்கு நியமித்தல்**

| பதவி | தெரிவு செய்யும் முறை |
|---|---|
| 01 கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழுள்ள தேசிய பாடசாலைகளுக்கு அல்லது நிறுவனங்களுக்குச் சொந்தமான இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய பாடசாலை அதிபர்கள் | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற 3 உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சைச் சபை ஒன்றினால் செய்யப்படுகின்ற சிபாரிசுக்கேற்ப அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.<br><br>(அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற புள்ளி முறைக்கேற்ப இந்த சிபாரிசு செய்யப்படும்.) |
| 02 கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழுள்ள தேசிய பாடசாலைகளுக்கு அல்லது நிறுவனங்களுக்குச் சொந்தமான இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு II மற்றும் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய பாடசாலை பிரதி, உதவி அதிபர்கள் | விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு மற்றும் திறமை என்பவற்றிற்கேற்ப கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும். |
| 03 மாகாணப் பாடசாலைகளின் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர் | விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு மற்றும் திறமை என்பவற்றிற்கேற்ப மாகாண அதிகாரிகளினால் நியமிக்கப்படும். |

**12.** இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்கள் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளின் அனுமதிக்கப் பட்ட பதவிகளில் கட்டாயமாகப் பணியாற்றுவதற்கு உட்படுகின்றனர். இங்கு மாகாண அரசாங்க சேவைப் பதவியொன்றில் பணியாற்றுவதற்காகத் தெரிவு செய்யப்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவர் குறித்த மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுவதற்காகத் தற்காலிகமாக விடுவிக்கப்படுவார். அவர் அவ்வாறு பணியாற்ற வேண்டிய காலமானது சேவையின் தேவை, பதவியணியை ஈடுபடுத்த வேண்டிய தேவை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப குறித்த மாகாண அதிகாரி மற்றும் நியமன அதிகாரி ஆகியோரது இணக்கப்பாட்டின் கீழ் தீர்மானிக்கப்படும்.

(i) சேவையில் இருந்து விடுவிக்கும் நிபந்தனைகளுக்கு ஏற்ப மாகாண அரசாங்க சேவைக்கு விடுவிக்கும் கடிதமொன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் குறித்த உத்தியோகத்தருக்கு வழங்கப்படும்.
(ii) உரிய மாகாண அதிகாரிகளினால் மாகாணத்திற்குள் நியமித்தல் மற்றும் இடமாற்றம் செய்தல் என்பன மேற்கொள்ளப்படும்.
(iii) மாகாண அரசாங்க சேவைக்காக விடுவித்த காலத்தின் இறுதியில் நிரந்தர சேவைக்கு மீண்டும் வருதல் வேண்டும்.

**13. திறன் விருத்தி**

13.1 சேவை ஆரம்பப் பயிற்சி

இச்சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்கின்ற இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் கல்வி அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கின்ற பயிற்சி நிறுவகம் ஒன்றிலே பாடசாலை முகாமைத்துவம் பற்றிய சேவை ஆரம்ப 01 மாத பயிற்சி ஒன்றினைப் பூர்த்தி செய்து இப்பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற எழுத்துமூல மற்றும் செயல்முறை பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அவ்வாறு சித்தியடையத் தவறும் உத்தியோகத்தர்களை அவர்கள் முன்னர் பணியாற்றிய சேவையான இலங்கை ஆசிரியர் சேவைக்குத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். (இந்த செயல்முறை பரீட்சையில் தேர்ந்தெடுத்த தலைப்பு ஒன்றின் கீழ் முன்வைத்தல் ஒன்றினை வழங்க வேண்டியதுடன் அதற்காக புள்ளி வழங்கும் முறை பின்னிணைப்பு "அ" வின் 4.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

13.2 ஆற்றல் விருத்தி

13.2.1 ஆற்றல் விருத்திப் பயிற்சிப் பாடநெறி **1**

அனைத்து உத்தியோகத்தர்களும் அதிபர் சேவைக்கு நியமிக்கப்பட்டு 06 வருடங்களுக்குள் நேர்வரிசை அமைச்சின் கல்விச் செயலாளரினால் அதிகாரம் வழங்கப்படும் நிறுவகம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற 01 மாத இயலளவு விருத்திப் பயிற்சிப் பாடநெறி 1 இல் சித்தியடைதல் வேண்டும்.

13.2.2 ஆற்றல் விருத்திப் பயிற்சிப் பாடநெறி 2

அனைத்து உத்தியோகத்தர்களும் அதிபர் சேவையின் தரம் 2 இற்கு நியமிக்கப்பட்டு 06 வருடங்களுக்குள் நேர்வரிசை அமைச்சின் கல்விச் செயலாளரினால் அதிகாரம் வழங்கப்படும் நிறுவகம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற 01 மாத இயலளவு விருத்திப் பயிற்சிப் பாடநெறி 2 இல் சித்தியடைதல் வேண்டும்.

**14. வரைவிலக்கணம் மற்றும் பொருள்கோடல்**

(i) “வர்த்தமானப் பத்திரிகை” என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையைக் குறிக்கும்.

(ii) “சேவைப் பிரமாணக் குறிப்பு” எனும் பதம் இலங்கை அதிபர்கள் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பைக் குறிக்கும்.

(iii) “ஆணைக்குழு” எனும் பதம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவைக் குறிக்கும்.

(iv) “தொடர்ச்சியான சேவைக் காலம்” எனும் பதம் தமது பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்று உண்மையாகவே அரசாங்க பாடசாலை ஒன்றில் கடமையாற்றிய சேவைக் காலத்தைக் குறிக்கும். அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட பிரசவ விடுமுறை தவிர்ந்த ஏனைய அனைத்து சம்பளமற்ற விடுமுறைக் காலங்கள் தொடர்ச்சியான சேவைக் காலத்திற்குள் கணிப்பிடப்படமாட்டாது.

(v) “செயலாளர்” எனும் பதம் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நேர்வரிசை அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.

(vi) “சேவை” எனும் பதம் இலங்கை அதிபர்கள் சேவையைக் குறிக்கும்.

(vii) “அமைச்சு” எனும் பதம் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நேர்வரிசை அமைச்சைக் குறிக்கும்.

(viii) “தேசிய கற்பித்தல் டிப்ளோமா” எனும் பதம் கல்வி அமைச்சின் கீழுள்ள கல்வியியல் கல்லூரி ஒன்றிலே பெற்றுக் கொண்ட தேசிய கற்பித்தல் பற்றிய டிப்ளோமாவைக் குறிக்கும்.

(ix) “ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்” எனும் பதம் கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட இரண்டு வருடங்களுக்குக் குறையாத நிறுவகசார் ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியொன்று அல்லது கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட தொலைக் கல்வி முறையில் பயின்ற மூன்று வருடங்களுக்குக் குறையாத ஆசிரியர் பயிற்சிப் பாடநெறி ஒன்றினைக் குறிக்கும்.

**15.** சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது யாதேனுமொரு ஆண்டிலே ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய தொகையானது அந்த ஆண்டின் யூன் மாதம் 30 ஆந் திகதியன்று சேவையில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையாக இருத்தல் வேண்டும்.

**16.** இப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கின்றவாறு தேவையான தேர்ச்சி மற்றும் திறமை என்பவற்றினை அனைத்து உத்தியோகத்தர்களும் உரியவாறு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**17. சேவையில் உள்ளவர்களை உள்ளீர்ப்புச் செய்தல்**

17.1 சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் தினத்தன்று சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ள தரக் கட்டமைப்பிற்கு உள்ளீர்ப்புச் செய்யும் பணி 2010.01.05 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை 6/2006 இன் அட்டவணை 11 இன் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், அதற்குரிய நிலுவைச் சம்பளம் வழங்குதல் 2010.12.31 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை 28/2010 இன் 2.3 இற்கேற்ப மேற்கொள்ளப்படும்.

17.2 இச்சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் தினத்தன்று சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் மீள்நிறுவப்பட்ட இலங்கை சாதாரண கல்விசார் (அதிபர்) சேவைக்கு தாபன விதிக் கோவையின் VII அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாகப் பின்வருமாறு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

எவ்வாறாயினும் உள்ளீர்ப்புக் காரணமாக குறித்த நபரின் சம்பளத்தில் அல்லது சம்பள ஏற்றத் தினத்தில் மாற்றம் ஏற்படலாகாது. அத்தினம் உள்ளீர்ப்பிற்கு முன்னர் இருந்த சம்பள ஏற்றத் தினமாக மாற்றமின்றி அமுல்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு சம்பள மாற்றத்தின் போது குறித்த நபர் இறுதியாகப் பெற்று வந்த சம்பளப் படிமுறைக்கு நேரொத்ததாக அமைவதன் மீது தாபன விதிக் கோவையின் VII அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதை அடுத்துள்ள உயர் சம்பளப் படிமுறையிலும் வைத்தலாகாது.

17.3 இச்சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் தினமாகும் போது சேவையில் உள்ள சுயமாக ஓய்வுபெறும் வயதை அடைந்திராத உத்தியோகத்தர் ஒருவருக்கு அவர் செய்யும் வேண்டுகோளின் மீது ஓய்வூதிய சம்பளக் கோவையின் 7 ஆம் பிரிவின் கீழ் சேவையில் இருந்து ஓய்வுபெறுவதற்கான விருப்பத்தை தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும். அவ்வாறானதொரு நிவாரணமளிக்கும் அளவிற்கு இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் ஊடாக மோசமான தாக்கம் அந்த உத்தியோகத்தருக்கு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு திருப்தியடையும் பட்சத்தில் இச்சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படுகின்ற தினத்திற்கு 2 வருடங்களுக்குள் அவருக்கு அவ்விருப்பத்தைத் தெரிவிக்க முடியும்.

17.4 உள்ளீர்ப்புச் செய்யும் நடைமுறை

17.4.1 உரிய தினத்தன்று இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் சேவையின் வகுப்பு 3 இற்கும்,

17.4.2 உரிய தினத்தன்று இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2 தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் சேவையின் வகுப்பு 2 இற்கும்,

17.4.3 உரிய தினத்தன்று இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2 தரம் I ஐச் சேர்ந்த முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2008.07.01 ஆந் திகதியன்று இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1 இற்கு பதவி உயர்வு பெறுவதற்கான தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் சேவையின் வகுப்பு 1 இற்கும் ஏனைய வகுப்பு 2 தரம் 1 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் சேவையின் வகுப்பு 2 இற்கும்,

17.4.4 உரிய தினத்தன்று இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1 ஐச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களும் சேவையின் வகுப்பு 1 இற்கும், உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

17.5 உள்ளீர்ப்புச் செய்ததன் பின்னர் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் பதவி உயர்வு வழங்கும் போது தேவையான சேவைக் காலத்தைக் கணிப்பிடுவதற்காக ஆட்சேர்ப்பிற்கு முன்னர் இருந்த அதிபர் சேவையின் வகுப்பு / தரத்தின் சேவைக் காலமும் கணிப்பிடப்படும்.

17.6 உள்ளீர்ப்புச் செய்ததன் மீது சம்பளம் தயாரித்தல் பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (viii) இன் பிரகாரம் இடம்பெறுதல் வேண்டும்.

17.7 உள்ளீர்ப்புக் காரணமாக சம்பள ஏற்றத் திகதியில் மாற்றம் ஏற்படாது.

**18. இடைக்கால ஏற்பாடுகள்**

இடைக்கால ஏற்பாடுகள் 2016.01.01 ஆந் திகதி வரையில் நடைமுறையில் இருக்கும்.

18.1 இடைக்காலத்தினுள் பதவி உயர்வுகள்.

18.1.1 தரம் II இற்கு பதவி உயர்த்துதல்.

இடைக்காலத்தினுள் வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை தரம் II இற்கு பதவி உயர்த்தும் போது இலக்கம்: 1086/26 உடைய மற்றும் 1999.07.02 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்கள் இந்த சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 1 இல் சித்தியடைதல் ஆற்றல் விருத்தி பயிற்சி பாடநெறி 1 இல் சித்தியடைய வேண்டிய தேவையில் இருந்து விடுவிக்கப்பட்டு 10.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளை பூர்த்தி செய்யும் தினத்தன்று தரம் II இற்கு பதவி உயர்த்தப்படுவர்.

18.1.2 தரம் I இற்கு பதவி உயர்த்துதல்.

இலக்கம்: 1086/26 உடைய 1999.07.02 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த வகுப்பு 1 இற்கு பதவி உயர்வு பெறுவதற்குத் தேவையான ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்கள், இந்தப் பிரமாணக் குறிப்பின் கீழ் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 1 மற்றும் 2 இல் சித்தியடைய வேண்டிய தேவையில் இருந்தும் மற்றும் ஆற்றல் விருத்திப் பயிற்சிப் பாடநெறி 1 மற்றும் 2 இல் இருந்தும் விடுவிக்கப்பட்டு 10.2.1 இன் (v) மற்றும் (vi) தவிர்ந்த ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினத்தன்று தரம் I இற்கு பதவி உயர்த்தப்படுவர்.

தரம் I இற்கு பதவி உயர்த்துவதற்காக இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் 9.1 இன் பிரகாரம் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி மற்றும் இணைப்பு மொழித் தேர்ச்சி என்பவற்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**19**. இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக தாபன விதிக் கோவை மற்றும் இலக்கம் 1589/30 மற்றும் 1999.02.20 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கு சேவையின் அனைத்து உத்தியோகத்தர்களும் உட்படுவர்.

**20**. இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்பாடுகள் செய்யப்படாத யாதேனுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பாக கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரது சிபாரிசின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

**பின்னிணைப்பு “(அ)”**

**இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை பற்றிய விபரம்**

01. எழுத்துப் பரீட்சை பின்வரும் வினாத் தாள்களைக் கொண்டிருக்கும்

(i) கிரகித்தல் – 100 புள்ளிகள்
(ii) பாடசாலை நிருவாகம் பற்றிய சம்பவக் கற்கை – 100 புள்ளிகள்
(iii) உளச்சார்பு மற்றும் பொது அறிவு – 100 புள்ளிகள்

02. பாடத்திட்டம்

i. கிரகித்தல் - 1 ½ மணித்தியாலம்

பந்திகள் சிலவற்றின் பொருளைக் கிரகித்துக் கொள்வதற்குள்ள பரீட்சார்த்தியின் திறமையை அளவிடுவதற்காகவும் மற்றும் சாராம்சப்படுத்தல் பற்றிய அறிவினை அளவிடுவதற்காவும் கேள்விகள் தயாரிக்கப்படும்.

ii. பாடசாலை நிருவாகம் பற்றிய சம்பவக் கற்கை – காலம்: 02 மணித்தியாலம்

பாடசாலை மற்றும் முகாமைத்துவம் என்பவற்றினுள் நிகழக்கூடிய சம்பவங்கள் சிலவற்றினைக் குறிப்பிட்டு அச்சம்பவங்களுக்குப் பதிலளித்தல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல் என்பன தொடர்பாக பரீட்சார்த்திகளின் கருத்தினை அறிவதை நோக்காகக் கொண்ட கேள்விகள் வழங்கப்படும்

iii. உளச்சார்பு மற்றும் பொது அறிவு 1 ½ மணித்தியாலம்

தேசிய, வலய மற்றும் உலகின் பல்வேறு அமைப்புச் சூழலிலும் எமது சூழலிலும் நிலவுகின்ற கலாசார, கல்வி, விஞ்ஞான, அரசியல், பொருளாதார மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட காரணிகள் தொடர்பாகப் பரீட்சார்த்திகளிடம் காணப்படுகின்ற விளக்கம் மற்றும் அறிவினையும், சொல், புள்ளிவிபரம் மற்றும் வரைபு வடிவில் வழங்கப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் விண்ணப்பதாரியின் தீர்மானம், பதில் என்பவற்றினை எதிர்பார்ப்பதன் ஊடாக விண்ணப்பதாரியின் புரிந்துகொள்ளக் கூடிய தன்மை மற்றும் அறிவு என்பவற்றினை இதன் மூலம் அளவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

03. (அ) இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்திகள் விரும்பும் ஒரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழியினை மாற்றுவதற்கு அனுமதி இல்லை.

(இ) சகல விண்ணப்பதாரர்களும் மூன்று வினாப் பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

04. நேர்முகப் பரீட்சை

4.1 சாதாரண நேர்முகப் பரீட்சை

எழுத்துமூல பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் உச்சப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஒழுங்கு முறைக்கேற்ப வெற்றிடங்களைப் போன்று இருமடங்கு சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அதில் தகைமை பெறுவோர் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

4.2 கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை

அதிபரின் கடமைகளுடன் தொடர்புடைய தலைப்பு ஒன்றின் கீழ் முன்வைத்தல் ஒன்றினை வழங்குதல் வேண்டும். அதற்காக 25 புள்ளிகள் வழங்கப்படும்.

முன்வைத்தலுக்காகப் புள்ளி வழங்கும் முறை

| | |
|---|---|
| 1. அறிமுகம் | 04 புள்ளிகள் |
| 2. முன்வைத்தல் திட்டம் – | 04 புள்ளிகள் |
| 3. முன்வைத்தல் திறன் – | 08 புள்ளிகள் |
| 4. விடய அறிவு | 05 புள்ளிகள் |
| 5. நேர முகாமைத்துவம் – | 04 புள்ளிகள் |

**பின்னிணைப்பு "(ஆ)"**

**இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 3 இற்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை**

01. இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 3 இற்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்.

(i) தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் - 100 புள்ளிகள்

(ii) பாடசாலை நிதி நிருவாகம் மற்றும் நிதிப் பிரமாணம் - 100 புள்ளிகள்

02. உத்தியோகத்தர் ஒருவருக்குரிய பாடங்களுக்கு ஒரே முறையில் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

03. சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக் குறைந்தது 40% வீத புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

04. பாடத்திட்டம் :-

(i) தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் - காலம் : 2 மணித்தியாலங்கள்

தாபன விதிக் கோவையின் அத்தியாயம் VII, VIII, IX, X, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் பற்றிய அறிவினை பரீட்சித்தல்.

(ii) பாடசாலை நிதி நிருவாகம் மற்றும் நிதிப் பிரமாணம் - காலம்: 2 மணித்தியாலங்கள்

வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள், நிதி நிர்வாகம் மற்றும் நிதிப் பொறுப்புக்களை ஒப்படைத்தல், காசினைப் பொறுப்பேற்றல், கணக்குப் பதிவு மற்றும் கொடுப்பனவு, அரச நிதி பொறுப்புடமை, முற்பணம் மற்றும் வங்கிக் கணக்கு, வேலைகள் மற்றும் சேவைகள், பொருள் கணக்கெடுப்பு, கணக்காய்வு விசாரணைகள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற பேரேடுகள், வருமானச் செலவு சுருக்கம், வங்கிக் கணக்கிணக்கக் கூற்று, சென்மதி சம்பளம், கடமை தொலைபேசி தொடர்பாக வெளியிட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப் பிரமாணம் பற்றிய சாதாரண அறிவு பரீட்சிக்கப்படும்.

05. (அ) இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்திகள் விரும்பும் ஒரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழியினை மாற்றுவதற்கு அனுமதி இல்லை.

**பின்னிணைப்பு "(இ)"**

**இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2 இற்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை**

01. இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2 இற்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்.

(i) பாடசாலை நிருவாகம் மற்றும் கண்காணிப்பு - 100 புள்ளிகள்
(ii) பாடசாலை திட்டமிடல் - 100 புள்ளிகள்
(iii) கல்வியின் நவீன போக்குகள் மற்றும் நடைமுறைகள் - 100 புள்ளிகள்

02. உத்தியோகத்தர் ஒருவருக்குரிய பாடங்களுக்கு ஒரே முறையில் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

03. சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

04. பாடத்திட்டம் :-

(i) பாடசாலை நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு – காலம்: 03 மணித்தியாலங்கள்

பாடசாலை ஒன்றின் நல்லாட்சிக்காக அதிபர் ஒருவரின் கடமைகள் பற்றிய பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் அனுபவத்தைப் பரீட்சிப்பதற்கான வினாக்கள் உள்ளடக்கப்படும். பங்கேற்பு, திட்டமிடல், பாடசாலை முகாமைத்துவ முறைகள், நேரசூசி தயாரித்தல், பொறுப்புக்களைப் பகிர்தல், பாடசாலை அபிவிருத்திக்கான மக்கள் பங்கேற்பு, பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம், பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி, ஆசிரியர் நலன்புரி வசதிகள், மாணவர்கள் நட்பு பாடசாலை எண்ணக்கரு, மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி ஆகிய துறைகள் பற்றிய அறிவு அளவிடப்படும்.

(ii) பாடசாலை திட்டமிடல் - காலம்: 03 மணித்தியாலங்கள்

அபிவிருத்தியின் வழிகாட்டியாக அதிபர் ஒருவரின் கடமைகள் பற்றி பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றினைப் பரீட்சிப்பதற்கான வினாக்கள் உள்ளடக்கப்படும். பாடசாலை முகாமைத்துவ சபைகள், பாடசாலை ஒன்றின் நோக்கு மற்றும் செயற்பணி, பாடசாலை தகவல் அடிப்படையிலான தயாரிப்புக்கள், இணைந்த திட்டங்கள், நீண்ட கால மற்றும் குறுங்காலத் திட்டங்கள், வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டங்கள், பாடசாலை வலையமைப்புக்கள் மற்றும் வளங்களைத் திட்டமிடல், பிராந்திய அபிவிருத்திக்குப் பாடசாலையின் பங்களிப்பு ஆகிய துறைகள் பற்றிய அறிவு அளவிடப்படும்.

(iii) கல்வியின் நவீன போக்குகள் மற்றும் நடைமுறைகள் – காலம்: 03 மணித்தியாலங்கள்

கற்றல் மற்றும் கற்பித்தல் பற்றிய புதிய எண்ணக்கரு, அனுபத்தின் மூலம் கற்பித்தல், தர்க்க ரீதியான காரணங்கள், கல்வியின் சமதன்மை, விசேட கல்வித் தேவை உள்ளவர்களுக்கான கல்வி, முறைசாராக் கல்வி, முறைசார் கல்வி, முதியோர் கல்வி, வாழ்நாள் கல்வி, திறமையை அடிப்படையாகக் கொண்ட கல்வி, வாழ்வாதாரக் கல்வி, மாணவர் ஆலோசனை மற்றும் தொழில்சார் வழிகாட்டல் ஆகிய பாட விடயங்கள் பற்றிய அறிவு அளவிடப்படும்.

05. (அ) இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் இடம்பெறும்.

(ஆ) பரீட்சார்த்திகள் விருப்பமான ஒரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

**பின்னிணைப்பு "(ஈ)"**

**இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கில மொழிப் பரீட்சை**

01. இலங்கை அதிபர் சேவைக்குரிய ஆங்கில மொழிப் பரீட்சையானது ஒரு வினாத்தாளைக் கொண்டது.
    i. ஆங்கிலம் - 100 புள்ளிகள்

02. சித்தியடைவதற்காக இவ்வினாத்தாளுக்கு ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

03. பாடத் திட்டம் :-

General English – Time 03 hours

Suitable level of proficiency on the following forms of grammar in the written language is expected from the candidate.

- Tenses and Numbers
- Sentences (Simple/ Compound/ Complex/ Compound Complex)
- Relative Clauses
- Reported speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

The knowledge on the modern formats and styles of writing is tested in following area of study.

- Summary writing
- Report writing
- Essay writing

**பின்னிணைப்பு "(உ)"**

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**இலங்கை அதிபர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை தரம் II இற்கு பதவி உயர்த்துதல்.**

**பகுதி I**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :- திரு/திருமதி/செல்வி ''''''''''''''''''''
   (ஆ) முதல் எழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :- ''''''''''''''''''''''
   (இ) பெயர் மாற்றப்பட்டிருப்பின் இதற்கு முன்னர் பயன்படுத்திய பெயர் :- ''''''''''
   ''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''''
   (பெயர் மாற்றப்பட்டிருப்பின் மாத்திரம்)
2. பிறந்த திகதி :- ''''''''''''''''''''''''''''''''''''''''''''''
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-''''''''''''''''''''''''''
4. சொந்த முகவரி :-'''''''''''''''''''''''''''''''''''''''''''''''
5. தற்போது பணியாற்றும் பாடசாலை :-''''''''''''''''''''''''''''''
6. தற்போது வகிக்கும் பதவி :- '''''''''''''''''''''''''''''''''''
7. பாடசாலை அமைந்துள்ள வலயம் :- ''''''''''''''''''''''''''''''''''
8. இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 3 இன்/ தரம் III இற்கான நியமனத் திகதி :- '''
9. இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 3 இற்கான நியமனக் கடித இல. :-'''''''''''
   திகதி :-'''''''''''''

10. நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :- ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' '
11. I ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி மற்றும் பரீட்சை இலக்கம் :-- ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' '
12. தரம் III இல் ஆறு (06) வருடங்கள் பூர்த்தியான திகதி :-- ' ' ' ' ' ' ' ' ' ' ' ' ' '
13. பதவி உயர்வின் அண்மித்த ஆறு (06) வருட காலப் பகுதியினுள் காட்டியுள்ள செயலாற்றுகை மட்டம்:

| ஆண்டு | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

14. ஆற்றல் அபிவிருத்திப் பயிற்சிப் பாடநெறி 1 இல் சித்தியடைந்த திகதி :-

15. மற்றைய அரசகரும மொழியில் சித்தியடைந்த திகதி அல்லது சித்தியடைய வேண்டிய தேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட திகதி :- ..............................

16. இணைப்பு மொழியில் சித்தியடைந்த திகதி அல்லது சித்தியடைய வேண்டிய தேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட திகதி : அக்கடிதத்தில் முன்னளிப்பு இலக்கம் மற்றும் திகதி :- ..............................................................................

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் யாதேனுமொன்று பொய்யானது அல்லது பிழையானது என எனக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவனாவேன் எனவும், பதவி உயர்வு வழங்கியதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் பதவி உயர்வு இரத்துச் செய்யப்படும் என்பதற்கும் நான் உடன்படுகிறேன். என்னை .............................. ஆம் திகதி முதல் இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2 இற்கு பதவி உயர்த்துமாறு வேண்டிக்கொள்கிறேன்.

திகதி:- ..............................

......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

## பகுதி II

.............................. மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

திரு./திருமதி/செல்வி ............................................................ அவர்களின் மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியானவையாகும்.

(i) ............................................................ ஆம் திகதியன்று ஆறு (06) வருட தொடர்ச்சியான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்துள்ளார்/செய்யவில்லை.
(ii) பதவி உயர்விற்கு அண்மித்த ஆறு (06) வருட காலப் பகுதியினுள் திருப்தியான மட்டம் அல்லது அதிலும் கூடிய மட்டத்திலான செயலாற்றுகை ஒன்றினை காட்டியுள்ளார்/காட்டவில்லை.
(iii) அந்த ஆறு வருட (06) காலப் பகுதியினுள் அரைச் சம்பள/சம்பளமற்ற விடுமுறை பெறவில்லை/பெற்றுள்ளார்.
(iv) அக்காலப் பகுதியினுள் எச்சரிக்கை தவிர்ந்த வேறு எந்த விதமான தண்டனைக்கும் உட்படுத்தி இல்லை/உள்ளார்.
(v) உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதும் உண்டு/இல்லை
(vi) குறித்த காலத்திற்குரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தினையும் பெற்றுள்ளார்/பெறவில்லை.
(vii) ............................................................ ஆம் திகதி முதல் நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/ நிரந்தரமாக்கப்படவில்லை.
(viii) I ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்/ சித்தியடையவில்லை.
(ix) ஆற்றல் அபிவிருத்தி பயிற்சிப் பாடநெறி 1 இல் சித்தியடைந்துள்ளார்/ சித்தியடையவில்லை.

(x) மற்றைய அரசகரும மொழியில் சித்தியடைய வேண்டிய தேவையினைப் பூர்த்தி செய்துள்ளார்/பூர்த்தி செய்யவில்லை.
(xi) இணைப்பு மொழியில் சித்தியடைய வேண்டிய தேவையினை பூர்த்தி செய்துள்ளார்/பூர்த்தி செய்யவில்லை.

இந்த உத்தியோகத்தர் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்துள்ளமையால் ............... ஆந் திகதி முதல் சேவையின் தரம் II இற்கு பதவி உயர்த்துவதற்குச் சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

..............................................
வலயக் கல்விப் பணிப்பாளர்.

திகதி :- ...............................

---

மாகாணக் கல்விச் செயலாளர்,

இலங்கை அதிபர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் .............................................................. அவர்களை ..............................................................ஆம் திகதி முதல் சேவையின் தரம் II இற்கு பதவி உயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

......................................................
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

திகதி : ...............................................................

---

செயலாளர்,
கல்வி அமைச்சு.

இலங்கை அதிபர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் .............................................................. அவர்களை .............................................................. ஆம் திகதி முதல் சேவையின் தரம் II இற்கு பதவி உயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

திகதி :- ............................................................... ....................................................
மாகாணக் கல்விச் செயலாளர்.

**பின்னிணைப்பு "(ஊ)"**

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**இலங்கை அதிபர் சேவையின் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை தரம் I இற்கு பதவி உயர்த்துதல்**

**பகுதி I**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :- திரு./திருமதி/செல்வி ..............................................
   (ஆ) முதல் எழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :- ..............................................
   (இ) பெயர் மாற்றப்பட்டிருப்பின் இதற்கு முன்னர் பயன்படுத்திய பெயர் :- .............................................. .............................................. ..........................................................................................
   (பெயர் மாற்றப்பட்டிருப்பின் மாத்திரம்)
2. பிறந்த திகதி :- ...............................................................
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ...............................................................
4. சொந்த முகவரி :- ...............................................................
5. தற்போது பணியாற்றும் பாடசாலை :- ...............................................................
6. தற்போது வகிக்கும் பதவி :-...............................................................
7. பாடசாலை அமைந்துள்ள வலயம் :- ...............................................................
8. சேவையின் முதல் நியமனம் பெற்ற வகுப்பும் திகதியும் :- ...............................................................
   நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :- ...............................................................
9. சேவையின் தரம் II இற்கு நியமித்த திகதி அல்லது பதவி உயர்வு பெற்ற திகதி :- ...............................................................
   கடித இல. :-...............................................................

10. I ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி மற்றும் பரீட்சை இலக்கம் :- ................................................................
11. II ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி மற்றும் பரீட்சை இலக்கம் :- ..........................................................................................................................
12. சேவையின் தரம் II இல் ஆறு (06) வருடங்கள் பூர்த்தியான திகதி :-..............................................................
13. பதவி உயர்வின் அண்மித்த ஆறு (06) வருட காலப் பகுதியினுள் காட்டியுள்ள செயலாற்றுகை மட்டம் :-

| ஆண்டு | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

14. ஆற்றல் அபிவிருத்திப் பயிற்சிப் பாடநெறி 2 இல் சித்தியடைந்த திகதி :- .....................................
15. பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா அல்லது கல்விமாணிப் பட்டம் பெற்ற திகதி :- .........................
16. பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா அல்லது பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமாவில் சித்தியடைந்த திகதி :-................................................................
17. மற்றைய அரசகரும மொழியில் சித்தியடைந்த திகதி அல்லது சித்தியடைய வேண்டிய தேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட திகதி :- ...............................................................
18. இணைப்பு மொழியில் சித்தியடைந்த திகதி அல்லது சித்தியடைய வேண்டிய தேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட திகதி :- அக்கடிதத்தின் முன்னளிப்பு இலக்கம் மற்றும் திகதி :- ...............................................................

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் யாதேனுமொன்று பொய்யானது அல்லது பிழையானது என எனக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவனாவேன் எனவும், பதவி உயர்வு வழங்கியதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் பதவி உயர்வு இரத்துச் செய்யப்படும் எனவும் நான் அறிவேன். என்னை .............................................................ஆம் திகதி முதல் இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்த்துமாறு வேண்டிக்கொள்கிறேன்.

திகதி :- ................................................................ ................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

## பகுதி II

...................................................................... மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

திரு./திருமதி/செல்வி ..................................................................அவர்களின் மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியானவையாகும்.

i. ................................................................ ஆம் திகதியன்று தரம் II இல் ஆறு (06) வருட தொடர்ச்சியான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்துள்ளார்/செய்யவில்லை.
ii. பதவி உயர்விற்கு அண்மித்த ஆறு (06) வருட காலப் பகுதியினுள் திருப்திகரமான மட்டம் அல்லது அதிலும் கூடிய மட்டத்திலான செயலாற்றுகை ஒன்றினை காட்டியுள்ளார்/ காட்டவில்லை.
iii. அந்த ஆறு வருட (06) காலப் பகுதியினுள் அரைச் சம்பள/சம்பளமற்ற விடுமுறை பெறவில்லை/பெற்றுள்ளார்.
iv. அக்காலப் பகுதியினுள் எச்சரிக்கை தவிர்ந்த வேறு எந்த விதமான தண்டனைக்கும் உட்படுத்தி இல்லை/உள்ளார்.
v. உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதும் உண்டு/இல்லை
vi. குறித்த காலத்திற்குரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தினையும் பெற்றுள்ளார்/பெறவில்லை.
vii. ................................................................ ஆம் திகதி முதல் நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/ நிரந்தரமாக்கப்படவில்லை.
viii. I ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்/ சித்தியடையவில்லை.
ix. II ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்/ சித்தியடையவில்லை.
x. ஆற்றல் அபிவிருத்தி பயிற்சிப் பாடநெறி II இல் சித்தியடைந்துள்ளார்/ சித்தியடையவில்லை.
xi. பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாவில் அல்லது கல்விமாணி பட்டத்தில் சித்தியடைந்துள்ளார்/ சித்தியடையவில்லை.
xii. பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா அல்லது பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமாவில் சித்தியடைந்துள்ளார்/ சித்தியடையவில்லை.
xiii. மற்றைய அரசகரும மொழியில் சித்தியடைய வேண்டிய தேவையினை பூர்த்தி செய்துள்ளார்/பூர்த்தி செய்யவில்லை.
xiv. இணைப்பு மொழியில் சித்தியடைய வேண்டிய தேவையினை பூர்த்தி செய்துள்ளார்/பூர்த்தி செய்யவில்லை.

இந்த உத்தியோகத்தரை ........................................ ஆம் திகதி முதல் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

..................................................
வலயக் கல்விப் பணிப்பாளர்.

திகதி : - ..................................................................

மாகாணக் கல்விச் செயலாளர்,

இந்த உத்தியோகத்தரை ............................................... ஆம் திகதி முதல் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

திகதி : - ..................................................................

செயலாளர்,
கல்வி அமைச்சு.

இந்த உத்தியோகத்தரை ................................................................ ஆம் திகதி முதல் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

..................................................
மாகாணக் கல்விச் செயலாளர்.

திகதி : - ..................................................................

11-92

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.